**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 283/2019**
**Private complaint**
**PETITIONER SIDE WITNESS NO. 1**

| | |
|---|---|
| **Name** : கல்பனா | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**1** வது எதிர் மனுதாரர் ஆஜர். **(2 ,3** வது எதிர் மனுதாரர் இறந்துவிட்டனர்.**)**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 283/2019 19.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 4.00AN**

**<u>முதல் விசாரணை:</u>**

1, நான் தற்போது தஞ்சாவூர் கீழவாசல், பூமால்ராவுத்தர் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். இந்த வழககில் இறந்துபோன சோமசுந்தரம் எனது தந்தை ஆவார். அவர் தான் எதிர் மனுதாரர்களுக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்திருந்தார். எனது தந்தை 03.04.2025 ல் இறந்துவிட்டார். நானும் எனது தம்பியும் வாரிசுதாரர்களாக உள்ளோம். இந்த வழக்கில் அவரது இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். நான் தான் இந்த வழக்கை அவரது சார்பாக நடத்தி வருகிறேன். எனக்கு வேலை வாங்குவதற்காக எனது தந்தையிடம் ஆஜர் எதிரி செல்வராஜ் ரூ. 1,40,000/- 2018 ல் வாங்கியுள்ளார். தேதி, மாதம் ஞாபகமில்லை. எனது அப்பாவிற்கு தெரிந்த நபரான பூமா என்பவர்க்கு சத்துணவு அமைப்பாளராக வேலை வாங்கி தருவதற்கு ரூ. 1,90,000/- ஆஜர் எதிரி செல்வராஜ் வாங்கியுள்ளார். மற்றொரு நபருக்கு சத்துணவு உதவியாளராக வேலை வாங்கி தருவதாக கூறி ரூ. 50,000/- வாங்கியுள்ளார். 1 வது எதிரி செல்வராஜ் , 2 எதிர் மனுதாரரிடம் மேற்படி பணத்தை கொடுத்து வேலை வாங்கி தருவதாக சொல்லியுள்ளார். ஆனால் அவர் சொன்னாவாறு வேலை வாங்கி தரவில்லை. அதன்பிறகு 8 நபர்களுக்கு சமையல் உதவியாளர் வேலை வாங்கி தருவதாகவும், பின்பு 2 நபர்களுக்கு அங்கன்வாடி வேலை வாங்கி தருவதாகவும் கூறி ரூ. 1,50,000/-ஏமாற்றியதாக தெரியவந்தது. பின்பு சங்கர் என்பவரிடம் கால்நடை உதவியாளர் வேலை வாங்கி தருவதாக கூறி ரூ. 25,000/- வாங்கியதாக தெரியவந்தது. ஆனால் 1 வது எதிரி யாருக்கும் எந்த வேலையும் வாங்கி தரவில்லை. பணத்தை திருப்பி கேட்டதற்கு 1 வது எதிரி , 3 வது எதிரியிடம் பணத்தை கொடுத்திருப்பதாக சொன்னார். பணத்தை எவ்வளவு முறை கேட்டும் திருப்பி கொடுக்கவில்லை என்பதால் எனது அப்பா கிழக்கு காவல்நிலையத்தில் 31.12.2018 ம் தேதி புகார் கொடுத்தார்.

அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுககவில்லை என்பதால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலரிடம் பதிவு தபாலில் புகார் அனுப்பியுள்ளார்.அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் நீதிமன்றத்தில் சட்டபிரிவு 156(3) குவிமுச மனுதாக்கல் செய்துள்ளார். அதன்பிறகும் நடவடிக்கை எடுக்காததததால் நீதிமன்றமே தனிபுகாராக கோப்பிற்கு எடுத்துள்ளது. எதிர் மனுதாரர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

**(வழக்கு ஆவணங்களை குறியீடு செய்வதற்காகவும், சாட்சியின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.